சுருக்கம்

செய்தி மக்கள் தொடர்புத் துறை - விழாக்கள் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28.01.2021 அன்று அறிவித்த அறிவிப்பு – மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாளான பிப்ரவரி 24-ஆம் நாள் அன்று சென்னையில் அரசு விழாவாக கொண்டாடிட அனுமதியும் மற்றும் அதற்கான தொடர் செலவினமாக ஆண்டுதோறும்ரூ.1,20,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பும் செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி-விழா)த் துறை

அரசு ஆணை (நிலை) எண்.26 நாள்: 16.02.2021

திருவள்ளுவராண்டு 2052

சார்வரி, மாசி 4 –ஆம் நாள்

படிக்கப்பட்டது:-

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு, நாள் 28.01.2021.

ஆணை: -

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு உயர் கல்வி மன்ற வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் திருவுருவச் சிலையை 28.01.2021 அன்று திறந்து வைத்து கீழ்க்கண்ட அறிவிப்பை அறிவித்தார்கள்:-

> “மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய பிறந்த நாளான பிப்ரவரி 24-ஆம் நாள் அன்று ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பெருமை சேர்க்கின்ற விதமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாடப்படும். அதுசமயம், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வளாகத்தில் நிறுவப்பட்ட அம்மா அவர்களின் திருவுருவச் சிலைக்கு அரசின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும்.”

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளஅறிவிப்பினை செயற்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பிறந்த நாளான பிப்ரவரி 24 -ஆம் நாள் அன்று சென்னை, தமிழ்நாடு உயர் கல்வி மன்ற வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் அரசு விழாவாக கொண்டாடலாம் என்றும், இவ்விழாவிற்கு இத்துறையால் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான செலவினம் ரூ.1,20,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) ஆண்டுதோறும் தொடர் செலவினமாக நிதி ஒப்பளிப்பு வேண்டியும் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை அவர்கள் அரசைக் கோரியுள்ளார்.

3. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை அவர்களின் கருத்துருவை ஏற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பிறந்த நாளான பிப்ரவரி 24-ஆம் நாள் அன்று சென்னை, தமிழ்நாடு உயர் கல்வி மன்ற வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தும் அரசு விழாவாக நடத்த அரசு ஆணையிடுகிறது.மேலும் இவ்விழாவிற்கான செலவினத்திற்கு ரூ.1,20,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், மேலும் இச்செலவினத்தை ஆண்டுதோறும் தொடர் செலவினமாகமேற்கொள்ளவும் அரசு அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

4. மேலே, பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> “2220 செய்தி மற்றும் விளம்பரம் - 60 ஏனையவை - 106 களவிளம்பரம் - மாநிலச் செலவினங்கள் - AI வெளியிடுதல் - 308 விளம்பரமும் பிரச்சாரமும் - 09 ஏனையவை" IFHRMS (து.தொ.கு.2220-60-106-AI–30809) பழைய (து.தொ.கு.2220-60-106-AI–0893)

5. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.1,20,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) 2020-2021-ஆம் நிதியாண்டுக்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட இயக்குநர், செய்தி மக்கள்தொடர்புத் துறை, சென்னை-9 அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2020-2021-ஆம் நிதியாண்டுக்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி(தவ(ம)செ)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9 அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை வெளியிட நிதித் துறை தனது அலுவல் சார்பற்ற எண்.7949/நிதி தவ(ம)செ)த்துறை, நாள். 16.02.2021 மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண். 1777 (ஓர் ஆயிரத்து எழுநூற்று எழுபத்து ஏழு) -இன்படி, இசைவளித்துள்ளது.

//ஆளுநரின் ஆணைப்படி//

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்

<u>பெறுநர்:-</u>

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.
மாவட்ட ஆட்சித் தலைவர், சென்னை மாவட்டம்.
இணை இயக்குநர் (நினைவகங்கள்), தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை-9.
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை மாவட்டம்.
சம்பள கணக்கு அலுவலர்.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-9/18.

<u>நகல்:-</u>

நிதி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி/வசெ.பொ.II.வஅI)த்துறை, சென்னை-9.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை (கணக்கு/வரவு- செலவு)த்துறை, சென்னை-9.

இகோ/உதிரி படிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்